22.06.2022

**S.T.C.No.** 1150/2016 பு.சா.1 பூபாலன்

**(சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்)**

<u>குறுக்கு விசாரணை</u>

1) நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் லாரி வைத்து டிரான்ஸ்போர்ட் தொழில் செய்து வந்தேன் தற்போது 5 ஆண்டுகளாக எந்த வேலையும் செய்யவில்லை. எத்தனை லாரி வைத்து தொழில் செய்தேன் என்றால் 3 லாரிகள். அந்த லாரிகளின் பதிவு எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. எனக்கும் எதிரிக்கும் எந்த வருடத்திலிருந்து வரவு செலவு இருந்தது என்றால் 2016 ம் வருடம் முதல். 2016 க்கு முன்பு எவ்விதமான வரவு செலவும் எதிரியுடன் எனக்கு இல்லை என்றால் சரிதான். 2012 ல் எதிரி என்னுடைய லாரிக்கு கடன்பெற்று கொடுத்தார் என்றால் சரிதான்.

2) எவ்வளவு ரூபாய் கடன் வாங்கினேன் என்றால் ரூ.5,50,000/- இருக்கும் என்று நினைக்கிறேன் சரியாக ஞாபகமில்லை. எத்தனை தவணை என்றால் 36 தவணைகள். ஒரு மாத தவணை எவ்வளவு என்றால் ஞாபகமில்லை அது இன்னும் நிலுவையில் உள்ளது. ஒரு மாத தவணை ரூ.20,700/- என்றால் சரிதான். மேற்படி லாரியின் பதிவு எண்.KA 01 AD 4699 என்றால் சரிதான். 2013 முதல் மேற்படி லாரி எதிரியிடம் தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி என் பெயரிலுள்ள லாரிக்கு 31.03.2014 ம் தேதி சங்ககிரி கிளை இண்டஸ்இண்ட் பேங்க் காசோலை எண்.023567 மூலம் ஒரு மாத தவணை ரூ.21,700/- ஐ எதிரி செலுத்தியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி காசோலை என்னிடம் கொடுக்கப்பட்டு எனது வங்கி கணக்கில் செலுத்தப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதேபோன்று காசோலை எண்.023671 காசோலை மூலம் ரூ.42,000/- எதிரி செலுத்தியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.மேற்படி லாரிக்கு கடன் தொகை கட்டாததால் பைனான்ஸ்லிருந்து லாரியை எடுத்துச் சென்று விட்டார்கள் என்றால் இல்லை.மேற்படி லாரியின் அசல் பதிவு சான்று எதிரியிடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி லாரி சம்பந்தமாக பைனான்ஸ் நிறுவனம் என் மீதும் என் மனைவி மீதும் சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் EP.No.84/2019 தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீட்டிற்கு ஸ்டேட் பேங்கில்

கடன் பெற்று அது தற்போதும் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

(இருதரப்பு வழக்கறிஞர்கள் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

**Sd/- Boobalan** **Sd/- S.R.Babu** 22.06.2022.
**Judicial Magistrate No.1, Sankari**